செ.வெ.எண் : 03 நாள் : 02.06.2017

# பத்திரிக்கை செய்தி

**பொதுமக்கள் குடிநீரை சிக்கனமாய் பயன்படுத்த திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்கள் வேண்டுகோள்!**

கரூர் மாவட்டத்தில் போதிய பருவ மழை பெய்யாததால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. ஆகவே, பொதுமக்கள் குடிநீரை தேவைக்குத் தகுந்தபடி சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் திருமதி. எஸ்.கவிதா கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், கரூர் மாவட்டத்தில், பொது மக்களின் குடிநீர் பிரச்சனை தொடர்பான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் குடிநீர் விநியோகம் தொடர்பான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது. பொதுமக்கள் தங்களது குடிநீர் தேவை தொடர்பான புகார்களை மேற்படி கட்டுப்பாட்டு அறையின் இலவச கட்டணமில்லா தொலைபேசி எண்.**18004255104** யை (Land Line)தொலைபேசி வாயிலாகவும் மற்றும் 04324–255104 என்ற தொலைபேசி எண்ணை, செல்லிடப்பேசி மற்றும் தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

திட்ட இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
கரூர்.

1/06/17
AD (A)